Special safety hats

* 459. Q.—THIRU K. VINAYAKAM:
THIRU S. J. RAMASWAMY:
THIRU KOLATHUR KOTHANDAM: } Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under consideration to compel the riders of scooters and motor cycles to wear special safety hats (shock absorbing helmet); and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஸ்கூட்டர்களை அல்லது மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச் செல்பவர்களுக்கு சாதாரணமாக தலையில் அடிபட்டு அவர்கள் பெரும்பாலும் இறக்க நேரிடுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தலையில் அடிபடுவதைத் தடுக்கும் பொருட்டு மேலைநாடுகள் சிலவற்றில் உள்ளது போலவே இங்கும் ஸ்கூட்டர்களையும் மோட்டார் சைக்கிள்களையும் ஓட்டிச் செல்பவர்கள் "தலைக் கவசம்" (Crash helmet) அணிந்து செல்வதைக் கட்டாயப்படுத்தலாமா என்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : ஸ்கூட்டர் ஓட்டுகிறவர்கள் மாத்திரம் தலையில் 'க்ராஷ் ஹெல்மெட்' போட்டுக்கொள்ள வேண்டுமா? அல்லது பின்னாலே உட்காருகிற மங்கையும் போட்டுக்கொள்ள வேண்டுமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஓட்டுபவர் கீழே விழுந்தால் மங்கையும் தப்ப முடியாது. (சிரிப்பு).

திரு. கொளத்தூர் கோதண்டம் : ஸ்கூட்டர் ஓட்டுபவர்கள் தலையில் ஹெல்மெட் அணிந்துகொள்ளவேண்டுமென்ற செயற்குறிப்பு இன்றைய அரசினரால் செய்யப்பட்டதா? அல்லது, இதற்கு முன்னால் இருந்த அரசினரால் செய்யப்பட்டதா? இந்த ஹெல்மெட்டுகளைச் சென்னையிலேயே தயார் செய்யப்போவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அந்தப் பரிசீலனை இன்றைய அரசு செய்ததா? அல்லது, முன்னால் இருந்த அரசு இதைப்பற்றி ஆலோசித்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னையில் உள்ள பிரபல நியுரோ-சர்ஜன் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள், பழைய காங்கிரஸ் அரசாங்கத்திற்கு இதுபற்றி ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார். இப்படிப்பட்ட ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அதிகமாகத் தலையில்தான் அடிபடுகிறது என்றும், ஆகவே, தப்பிக்க முடியாமல் உடனே இறந்துவிட நேரிடுகிறது என்றும் குறிப்பு அனுப்பியதன் பேரில், அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், 'இது மிகவும் சிறந்த யோசனை; இதை அமல்படுத்தலாம்' என்று 8-7-1966 அன்று குறிப்பு எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

1967 நவம்பர் 27]

திரு. கே. விநாயகம்: இந்த ஷாக் அப்ஸார்பிங் ஹெல்மெட் என்று சொல்லப்படும் தொப்பியை யார் உற்பத்தி செய்கிறார்கள்? ஒரு தனி நிறுவனமும் இது மாதிரி தொப்பிகளை உற்பத்தி செய்ய முன் வரவில்லையென்றால், அரசாங்கமே தம்முடைய ஒர்க்ஷாப்பிலே உற்பத்திசெய்து, அதை மலிவான விலைக்கு ஸ்கூட்டர் ஓட்டுபவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதுபற்றி வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருப்பதால், இங்கே தகவல்கள் கொடுப்பது அவ்வளவு உசிதமாக இராது.

அரிசி அரைவை ஆலைகள்

*460 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966-ம் ஆண்டில் ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக வழங்கப்பட்ட லைசென்சுகள் எத்தனை, மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சட்ட மன்றத்தின் முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக லைசென்ஸ் வழங்கப்படுவதில் ஊழல் ஏற்பட்டதன் காரணமாக, அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணவு இலாக்காவிலிருந்து மாற்றப்பட்டார்களா? அப்படி மாற்றப்பட்டிருந்தால், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதுமாதிரியான தகவல் ஒன்றும் இல்லை.

*461 வினா—திரு. இல. பலராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில சர்க்கார், ரைஸ் மில்களுக்கு வழங்கும் லைசென்ஸ் முறையை ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1958-ம் ஆண்டு அரிசி அரைவை தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 5-ம் பிரிவின் கீழ் அரசினால் வழங்கப்படும் அனுமதிச்சீட்டுகள் பற்றித்தான் மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வனுமதிச் சீட்டு வழங்கும் முறையை ரத்து செய்வது குறித்து எவ்வித செயற்குறிப்பும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற ரைஸ் மில்கள் நடத்த அனுமதி வழங்கும் சீட்டு கேட்டு விண்ணப்பம் செய்துள்ள நபர்கள் தமிழகம் பூராவும் அதிகமாக இருப்பதாகக்

---

* 93-ம் பக்கத்திலுள்ள இணைப்பைப் பார்க்கவும்.